செய்தி வெளியீடு எண்: 36 நாள்: 21.04.2018

### *தேனி மாவட்டம்*
### *குடிமைப் பணியாளர் தினத்தினை முன்னிட்டு அரசு அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-*

******

தேனி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் குடிமைப் பணியாளர் தினத்தினை முன்னிட்டு அரசு அலுவலர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (21.04.2018) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பேசுகையில், அரசு அலுவலர்களின் மன அழுத்தத்தினை குறைக்கவும், உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பணியாற்றிடவும் அரசு அலுவலர்களுக்குள் அறிமுகம் ஏற்பட்டு ஒன்றிணைந்து பணியாற்றிடும் வகையில் தமிழக அரசின் உத்தரவின்படி 12-வது இந்திய குடிமைப்பணிகள் தினத்தினை முன்னிட்டு ஆண் அலுவலர்களுக்காக கையூந்து பந்து, இசை நாற்காலி, சாக்குப்போட்டி, 400 மீட்டர் தொடர் ஓட்டம், 3கால் ஓட்டம், போன்ற போட்டிகளும், கயிர் இழுக்கும் போட்டிகளுக்கு பெண் அலுவலர்களுக்காக எறிபந்து, லக்கி கார்னர், இசை நாற்காலி, பாட்டிலில் நீர் ஊற்றி நிரப்புதல், கரண்டி எலுமிச்சை ஓட்டம், ஆகிய போட்டிகளும், ஆண்கள் மற்றும் பெண்கள் சேர்ந்து 4ஓவர் கிரிக்கெட் போட்டி போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. இந்திய குடிமைப்பணியின் முக்கியத்துவத்தினையும் பொதுமக்களுக்கு ஆற்றவேண்டிய கடமைகள் மற்றும் சேவைகளின் முக்கியத்துவம், அறிந்து, புது அற்பணிப்பு உணர்வுடனும், ஒருங்கிணைந்து அனைத்துத்துறை அலுவலர்களும் பணியாற்றிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்திய குடிமைப்பணிகள் 12-வது தினத்தினை முன்னிட்டு நடைபெற்ற போட்டிகளில் அரசு அலுவலர்களான 138 ஆண்கள், 46 பெண்கள் என மொத்தம் 184 அலுவலர்கள் கலந்துகொண்டனர். பல்வேறு போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

மேலும், போடிநாயக்கனூர் வட்டம் குரங்கனி காட்டுத்தீ விபத்தின்போது மீட்டுப்பணியில் ஈடுபட்ட அனைத்துத்துறைகளை சார்ந்த 762 அலுவலர்களுக்கு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இப்போட்டிகளின் போது, மாவட்ட காவல் கண்ணகாணிப்பாளர் திரு.வீ.பாஸ்கரன் அவர்கள், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ச.கந்தசாமி அவர்கள், மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பழனிக்குமார் அவர்கள், வேளாண் இணை இயக்குநர் திரு. முகமது அப்துல்நசீர் அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திருமதி ரசிகலா அவர்கள், திரு.சந்திரசேகரன் அவர்கள், திரு. ரவிக்குமார் அவர்கள், திருமதி ஜெயலட்சுமி அவர்கள், வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.சென்னியப்பன் அவர்கள், திரு.து தங்கவேல் அவர்கள், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட விளையாட்டு அலுவலர் திரு. சுப்புராஜ் அவர்கள் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**